# வருமானம் தரும் மலையக தேயிலை நாற்றுமேடை வர்த்தகம்

இலங்கையில் ஏற்றுமதிப் பயிர்களில் முதலிடத்திலிருப்பது தேயிலைப் பயிராகும். தேயிலையானது இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது.

கண்டி மாவட்டத்தின் யடிநுவர பிரதேசமானது தேயிலை சிறப்பாக பயிரிடப்படும் இடமாகும். அரச மற்றும் தனியார் இடங்களில் 100 ஏக்கருக்கு மேல் இத்தேயிலை பயிரிடப்படுகிறது. வௌ;வேறு வகையிலான தேயிலைச் செடிகள் இங்கு பயிரிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. விசேடமாக 2023, 2025, 2026, 2048 போன்ற வகைகளுக்கு இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாட்டு சந்தைகளிலும் நல்ல கேள்வி நிலவுகின்றது. மலைநாட்டுத் தேயிலை எப்போதுமே நல்ல குணம், சுவை, நிறம் என்பவற்றைக் கொண்டது.

தேயிலை பயிரிடுதல் விவசாயத்துறையின் கீழ் வருகிறது. இத்தொழில்துறையின் அபிவிருத்தியின் பொருட்டு அரசாங்கம பல்வேறு திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகின்ற போதிலும அவை எவ்வளவு தூரத்துக்கு பலன்களைத் தந்துள்ளது என்பதை சொல்வதற்கில்லை. இதே சமயம் நாட்டின் பொருளாதாரத்துக்கு உதவக் கூடியதாக, வெற்றிகரமான ஒரு தொழில்துறையாக நான் தேயிலைக் கன்று நாற்றுமேடைத் தொழிலை வளர்த்தெடுத்திருக்கிறேன்.

முதலில் மண்ணைக் கொத்திக் கிளறி பதப்படுத்தி கான்களை வெட்டிக் கொள்ள வேண்டும். பின்னர் இளங் கன்றுகளை நாட்டி ஒரு வருட காலத்துக்கு அக் கன்றுகளை நன்கு பராமரித்துவரவேண்டும். பின்னர்

செழிப்பாக வளர்ந்த கன்றுகளைப் பிடுங்கி முறைப்படி நிலத்தில்நட வேண்டும். இக்கன்றுகள் பின்னர் மலையக தேயிலைத் தோட்டங்களுக்கு மீள் நடுகைக்காக அனுப்பப்படுகின்றன.

2008ஆம் ஆண்டு எனது நாற்று மேடைகளில் 1500 கன்றுகளே இருந்தன. தற்போது 50 ஆயிரம் முதல் 75 ஆயிரம் வரையிலான கன்றுகள் எம்மிடம் உள்ளன. பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இந் நாற்றுமேடைத் தொழில் இன்று சட்டபூர்வமான பதிவு செய்யப்பட்ட ஒரு தொழிலாகும். மேலும் இப்பகுதியில் அதிகளவில் கன்றுகளை உற்பத்தி செய்யும் வர்த்தகராக என்னை சிறுதோட்ட அபிவிருத்தி அதிகாரசபை அங்கீகரித்துள்ளது.



ஆரம்பத்தில் அடி 12 x 5 மற்றும் 5 அங்குல அகலமும் ஏழு அங்குல உயரமும் கொண்ட 1500 பிளாஸ்டிக் உறைகளில் கன்றுகள் நாட்டப்பட்டன. படிப்படியாக கன்று உற்பத்தியை அதிகரிப்பதற்காக வங்கிக் கடன்களையும் பெற்றுக் கொண்டேன். பார்ப்பதற்கு இலகுவாகத் தோன்றினாலும் கன்றுகளை வளர்ப்பது இலகுவானதல்ல. அதிக உழைப்பை சிந்தி பாடுபட வேண்டியிருக்கும். அர்ப்பணிப்பு அவசியம். நாம் எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் அதன் வெற்றி எமது முயற்சி மற்றும் அர்ப்பணிப்பை

பொறுத்தது. தேயிலைக் கிளையை நாட்டுவதில் இருந்து அவற்றை அனுப்பி வைப்பதுவரை உழைப்பு ஏராளமாகத் தேவைப்படும்.
நான் ஆரம்பித்த இவ்வேலைத்திட்டத்தை படி நிலைகளில் ஊடாக குறிப்பிட முடியும்.

1. பிளாஸ்டிக் பைகளில் நிரப்புவதற்கென அவசியமான மண்ணைப் பெறுவதற்கான அனுமதிப் பத்திரம் அவசியம். தேயிலைக் கன்றை நடவுள்ள மண் சாரமுடையதா என்பதை பரிசீலித்து பார்க்க வேண்டும். கல், மணல் அற்றதாக இருக்க வேண்டும். கல், மண், வேறு துண்டு துணுக்குகள் இருக்குமானால் அம் மண் உபயோகமற்றதாகிவிடும்.

2. தயாரித்துக் கொண்ட மண்ணை பைகளில் இட்டு நிரப்ப வேண்டும். வாய் அகலம் 5 அங்குலம், உயரம் ஏழு அங்குலமாக இருக்க வேண்டும். நாற்று நடவுக்காக பதிவு செய்யப்பட்டுள்ள உயரம் இதுவாகும். ஒரு பையில் மண்ணை நிரப்புவதற்கு 2 ரூபா செலவாகும். தினமொன்றுக்கு ஒரு வேலையாள் ஆயிரம் முதல் 1200 பைகளில் மண் நிரப்புவார். நல்ல அனுபவம் கொண்டவரால் இது சாத்தியம்.

3. இவ்வாறு மண் நிரப்பப்பட்ட பைகளை நாற்று மேடைகளில் வைக்க வேண்டும். 15, 20 தினங்களாக புகை பிடித்து நன்றாக நீர் ஊற்றி வரவேண்டும். பின்னர் தேயிலை கிளைகளை நாட்ட வேண்டும். நடப்படும் தேயிலைக் கிளைகள் முற்றியவையாக இருத்தல் வேண்டும். இவ்வாறு இரண்டு மாதங்களாக வைத்திருக்க வேண்டும். இதன் பின்னர் சிறிது சிறிதாக சூரிய வெளிச்சத்துக்கு பழக்க வேண்டும். கிளையை நாட்டியது முதல் விற்பனைக்கு விடப்படும் வரை பசளை மற்றும் திரவ கிருமிநாசினி உபயோகிக்க வேண்டும்.

நிழல் கம்பிவலையை மூன்று வருடங்களுக்கு பாவித்து பின்னர் அகற்றிவிட வேண்டும். நல்ல தரமான நிழல் கம்பி வலையை வாங்குவதற்கு ஒன்றரை லட்ச ரூபா தேவைப்படும். மண்ணை பதப்படுத்தும் போது இரசாயனங்கள்

உபயோகிக்கப்பட வேண்டும். இவை விலை அதிகம். முன்னரைவிட தற்போது விலைகள் மூன்று மடங்காகியுள்ளன. பிளாஸ்டிக் பைகள் மற்றும் பசளை விலைகள் மூன்று மடங்காகியுள்ளன. இந்நிலையில் நிழல் வலை, பிளாஸ்டிக் பைகள், தள்ளுவண்டி, தெளிப்பான் கருவி போன்றவற்றை விலை கொடுத்து வாங்குவது தற்போதைய சூழலில் கடினமாகியுள்ளது.
சில வருடங்களுக்கு முன்னர் சுயதொழில் முயற்சிகளின்பேரில் வழங்கப்பட்ட பொருட்கள் தற்போது அவ்வாறு வழங்கப்படுவதில்லை என்பது பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. சுய தொழில் முயற்சிகளின் பேரில் வழங்கப்பட்ட பொருட்களை சிலர் விற்று காசாக்கிக் கொண்டதால் பொருட்கள் வழங்கப்படுவது நின்று போயுள்ளது. ஆரோக்கியமான கன்றுகளை சாதாரண விலைக்கு விற்பதன் மூலம் குறிப்பிடத்தக்க வருமானத்தைப் பெற முடியும். இதேபோல கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் இந்நாட்டு மேடைகளில் வேலை செய்வதன் மூலம் வருமானம் ஈட்ட முடியும்.

- பைகளில் மண் நிரப்புதல்
- கிளை வெட்டுதல்
- கன்று வளர்ச்சியின் பிரகாரம் வகைப்படுத்தல்

போன்ற பணிகளில் ஈடுபடுவதன் மூலம் கணிசமான வருமானம் பெற முடியும். ஒரு குடும்பத்தின் வருவாயை அதிகரிக்க உதவுவது மகிழ்ச்சிக்குரியதே. இந்த நாற்று மேடை தொழிலானது நாட்டினதும் குடும்பங்களினதும் பொருளாதாரத்துக்கு நேரடியாக உதவுகிறது. ஆனால் தேவைக்கேற்ற வகையில் கன்றுகளை விநியோகிக் முடியாத நிலைக்கு உபயோகப்படுத்த வேண்டிய மூலப் பொருட்களின் விலை கணிசமாக அதிகரித்திருப்பதே காரணம். இம் மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்படுமாயின் அது மிக முக்கியமானதாக இருக்கும்.

இவ்வாறு ஆரோக்கியமான கன்று உற்பத்தித் தொழிலுக்கு அரசாங்க மற்றும் தனியார் காணிகளில் நாற்று மேடைகள் அமைக்க முடியுமானால் நல்ல வருமானம் பெற முடியும்.

எழுத்து :
கல்பனீ தேவநாராயண
(மத்திய மாகாணம்)